மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல்கள் :

அரசியல், மாறுவேடப் போட்டிக்களம் அல்ல!

தமிழ்நாட்டின் நீண்டநெடிய அரசியல் வரலாற்றில் 1963ல் திருவண்ணாமலையில் இடைத்தேர்தல் தொடங்கி இப்போது நடைபெறவிருக்கிற 2026 மதுராந்தகம் தாராபுரம் இடைத்தேர்தல்கள்வரை அனைத்திலும் தமிழ்நாட்டின் மாண்புகளையும் மரபுகளையும் பாதுகாக்கும் ஜனநாயக களங்களாகவே கருதப்படுகின்றன. ஆனால், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வேட்பாளராக போட்டியிட்ட திருமதி.கே.மரகதம் குமரவேல் இந்த இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக்கழக வேட்பாளராகவும், அதேபோலவே தாராபுரம் நடந்து முடிந்த 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்ற திருமதி.பி.சத்தியபாமா இன்றைக்கு அதே தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலில் ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக்கழக வேட்பாளராக போட்டியிடுவதைப் பார்த்தால் **"மரத்திற்கு மரம் நிறம்மாறும் பச்சோந்திகள் போல"** இவர்கள் இருவரும் இருந்த கட்சியைவிட்டு, இன்னொரு கட்சியில் சேர்ந்து இந்த இடைத்தேர்தலில் போட்டியிடுவ தன்மூலம் தமிழக அரசியலில் ஜனநாயக சோதனை கூடமாக தேர்தல்களை பள்ளிக்கல் லூரிகளில் மாணவர்களிடையே நடக்கும் மாறுவேடப் போட்டிகளாக மாற்றியுள்ளார்கள் என்பதுதான் நிதர்சனமாகும்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக வழக்கறிஞர் ஐ.பரந்தாமனும், தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக எஸ். சுகன்யா அவர்களும் கழக வேட்பாளர்களாக உதயசூரியன் சின்னத்திலே நிறுத்தப்பட்டிருக்கி றார்கள். இவர்கள் இருவரும் திராவிட முன் னேற்றக் கழகத்தில் தொடர்ந்து உறுப்பினர்க ளாக சேர்ந்து தொடர்ந்து பணியாற்றியதன்மூ லம், இன்றைக்கு வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். எதிர் முனையில், தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக நிறுத்தப் பட்டிருக்கின்ற கே.மரகதம்குமரவேல், பி.சத்தி யபாமா ஆகிய இரண்டு வேட்பாளர்களும் அ.இ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் எதற்காக தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு ஏதுவாகவும் (Facilitate) இசைவாகவும், திரை மறைவில் மறைமுகமாக உதவிடும் வகையில் இருவரும் சட்டமன்ற பொறுப்புகளை ராஜி னாமா செய்ததன்மூலம் தங்களைத் தேர்ந்தெ டுத்த வாக்காளர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்துள்ளார்கள் என்பதே உண்மையாகும்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜி னாமா அன்றைய அ.இ.அ.தி.மு.கவினுடைய பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியி டம் முறையாகத் தெரிவிக்கப்படவில்லை என் பதும் அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் நாடறிந்த செய்தியாகும்.

இன்றைய முதல்வர் ஜோசப்விஜய் தலை மையில் தமிழ்நாட்டில் ஆட்சி அமைந்தவுடன் தமிழக வெற்றிக் கழகம் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு தினறிக்கொண்டிருந்த இக்கட் டான காலகட்டத்தில் இந்த கே.மரகதகுமர வேல் பி.சத்தியபாமா ஆகிய இருவரும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். அடுத்த சில மாதங்களிலேயே அறிவிக்கப்பட்டு இப்போது நடைபெறவிருக் கிற இந்த இடைத்தேர்தல்களில் இவர்கள் இரு வரும் தமிழக வெற்றி கழகத்தில் வேட்பாளர்க ளாக அறிவிக்கப்பட்டிருப்பதன் மூலம் "எங்கப்பன் குதிர்க்குள் இல்லை" என்ற பழ மொழிக்கேற்ப முதல்வர் ஜோசப்விஜயின் முகத்திரை அகற்றப்பட்டிருக்கிறது.

மேலும் இவர்களது அரசியல்பற்றின் நிலையாமையைப் பார்த்து வாக்காளப் பெரு மக்கள் இவர்களுக்கா வாக்களித்தோம் என்று ஆழ்ந்து வருத்தப்பட்டு ஜனநாயகமாண்பை யும், பண்பாட்டையும் காப்பாற்றுகின்ற கடமை உணர்வின் உலைக்கலமாக இந்த இடைத் தேர்தலை பயன்படுத்தும் வாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டுள்ளார்கள். ஆம்! நேர் மையான சிந்தனையின் அடிப்படையில் இந்த கே.மரகதம் குமரவேல்,பி.சத்தியபாமா ஆகிய இரு வேட்பாளர்களை நிராகரித்து வாக்களிப்ப தன்மூலம் மட்டும்தான் தமிழ்நாட்டின் அரசி யல் பண்பாடும் ஜனநாயகமும் காப்பாற்றப்ப டும் என்பதை உணர்ந்து செயல்பட நினைக்கிறார்கள்.

ஒரு அரசியல் இயக்கத்தின் சார்பாக அறி விக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாக பதவிப்பிரமா ணம் எடுத்துக்கொண்ட பின்னர் வெளிப்படை யாக அறியப்பட்ட திரைமறைவு அரசியல் கார ணங்களுக்காகத் தேர்ந்தெடுத்த மக்களை ஏமாற்றி, அவர்கள் சார்ந்த அர சியல் கட்சிகளுக்கு துரோகம் செய்து விட்டு ஆதாயம்அடையும் நோக்கத்துடன் ஏமாற்றிவிட்டு, தங்களது சட்டமன்ற உறுப் பினர் பொறுப்புகளை ராஜினாமா செய் தது மட்டுமில்லாமல், ஆளும் அரசியல் கட்சியின் வேட்பாளர்களாக அதே தொகுதியில் நிறுத்தப்பட்டிருப்பது கேலிகூத்தாகும்!

இத்தகைய சூழ்நிலையில் இடைத்தேர்தல் கள் நடைபெறுகிற இரண்டு தொகுதிகளில் வாக்காளர்கள் மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடும் இருக்க வேண்டும். கடந்தகா லங்களில் அவர்கள் இருவரும் நடந்து கொண்ட விதங்களை எண்ணிப்பார்த்து வாக் களிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த இரண்டுஇடைத்தேர் தல்களிலும் அந்த இருவரும் ஒருக்கால் வெற் றிபெற்றால் மீண்டும், வேறுகட்சிக்கு மாறமாட் டார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாத மும் இல்லை என்பதோடு அவர்கள் இருவரின் நிலை இரண்டகநிலையாகத்தான் இருக்கிறது! எனவே, இவர்கள் கொள்கைக்காகவோ லட்சி யங் களுக்காகவோ பொதுநல நோக்கங்க ளுக்காகவோ தங்களுடைய சட்டமன்ற உறுப் பினர் பொறுப்புகளை ராஜினாமா செய்ய வில்லை.

இன்றைய தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்களாக இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்ற அவர்கள் இருவரும் தாங் கள் அ.இ.அ.தி.மு.கவிலிருந்து விலகியதற்கு காரணம் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடிபழனிச்சாமி தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக்கொள்ள முடிவெடுத்தார் என்ற அபாண்டமான குற்றச்சாட்டாகும். இந்தக் கற் பனைக் குற்றச்சாட்டு மற்றும் காரணங்கள் அவர்கள் இருவரும் கட்சிமாறிய பச்சோந்தி தனத்தை நியாயப்படுத்துவதற்காக புனையப் பட்ட கற்பனைக் கதையாகும். இதில் எள்முனை யளவுகூட உண்மை இல்லை என்பதோடு ஒரு வாதத்திற்காக அவர்கள் இருவரது கருத்து அரசியல் அரங்கில் நிலவியதாக ஓர் ஒப்பீட்டுக் காக ஏற்றுக்கொண்டாலும்கூட, அதற்கான தீர்வு அவர்கள் ஆளுங்கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொள்ளும் உள்நோக்கம்தான் என்பதும் மக் களை ஏமாற்றுவதற்கான "ஓரங்கநாடகம்" என்பதை மக்கள் தெளிவாகவே புரிந்துள்ளனர்.

ஆகையால், இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதி களான வேட்பாளர்கள் மரகதகுமரவேல், சத்தி யபாமா ஆகியோருக்கு வாக்களித்த மக்க ளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த ஜனநாயக விரோதிகளை மக்கள் பிரதிநிதித்துவ சபையான மாநில சட்டமன்றத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுத்து அனுப்பினால், அது **"10 மாதம் சுமந்து பெற்ற தாயே, தன் பிள்ளைக்கு கள்ளிப்பாலில் கொள்ளி போடுவதாகிவிடும்"** என்பதை உணர்ந்து மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் வாக்காளப் பெருமக்கள் நல்ல முடிவெடுத்து எதிர்வரும் அக்டோபர் ஆறாம் நாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் உத யசூரியனுக்கு வாக்களித்து அதை "நீதிவழங் கும் எடைத்தேர்தல் ஆக்கவேண்டுமென்பதே" ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்க ளின் வேண்டுகோளாகும்!

இந்த நம்பிக்கையை விதைக்கும் நன்னம் பிக்கை முனைகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் மதுராந்தகம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி களில் தி.மு.க வேட்பாளர்களான வழக்கறிஞர் பரந்தாமன் மற்றும் வழக்கறிஞர் சுகன்யா ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்தில் முத்



பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

திரையிட்டு வாக்குகளை சேகரித்து பிரச்சா ரம் செய்துள்ளார்

களத்தில் நிற்கும் வேட்பாளர்களின் வளத்தையும், இயல்பையும் அவர்களின் கடந்தகால நிகழ்வுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஏன் இந்த இடைத்தேர்தல்? எதற்காக இந்த இடைத்தேர்தல்? எப்படி வந்தது இந்த இடைத்தேர்தல்? ஆகிய வினாக்களை துலாக்கோல் நிலையில் சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்க வேண்டியது வாக்காளர் பெருமக் களின் வரலாற்றுக் கடமையாகும்.

இந்த 2026 இடைத்தேர்தல் திராவிட முன் னேற்றக்கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலில் திருவண்ணாமலை இடைத் தேர்தலில் வெற்றி வாகை சூடியதன்மூலம் அறிஞர் அண்ணாவின் தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்த 2026 இடைத்தேர் தல்கள் தளபதி மு.க.ஸ்டாலின் வழிகாட்டுத லில் புதிய அத்தியாயத்திற்கு பதியம் போடு வோம். "ரீல்ஸ்" காட்சியிலிருந்து "ரியல்" ஆட்சிக்கான அரசியல் மாற்றங்களுக்கு நாற் றங்கால் உருவாக்குவோம்!



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், குன்னவாக்கம் பகுதியில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம். சரவணன், பாக முகவர் விஜயகுமார், கிளை செயலாளர் சுதேஷ் ஆகியோர் முன்னிலையில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தால்

அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு சிகிச்சையில் நெருக்கடி?

மதுரை,அக்.4- மருத்துவ கட்டமைப்புகளையும், மருத்துவர்கள், செவிலியர்கள் எண் ணிக்கையையும் அதிகரிக்காமல் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதால், அன்றாடம் மகப்பேறு சிகிச்சையில் பல்வேறு சவால்களையும், சிரமங் களையும் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட் டுள்ளதாக மருத்துவர்கள், செவிலியர் கள் தெரிவித்துள்ளனர்.

மகப்பேறு சிகிச்சைப் பிரிவு, பச்சி ளம் குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு களை மேம்படுத்தாமலேயே, தாய்மா மன் தங்க மோதிரம் திட்டம் தொடங்கப் பட்டுள்ளதால் தற்போது உள்ள மருத் துவக் கட்டமைப்பு, மருத்துவர்கள், பணியாளர்களை கொண்டு திட் டத்தை செயல்படுத்துவதுடன் மகப் பேறு சிகிச்சையை உரிய முறையில் மேற்கொள்ள முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து மருத்துவத் துறையை சேர்ந்த சில உயர் அதிகாரிகள் கூறிய தாவது: தனியார் மருத்துவமனையில் ஒரு குடும்பம் பிரசவத்துக்கு சராசரி யாக ரூ.70 ஆயிரம் செலவிடுகிறது.

இந்த செலவினத்தை குறைத்து, இலவசமாக அரசு மருத்துவமனைக ளில் பிரசவங்கள் மேற்கொள்வதற்கு தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் செயல்படுத்துவதாக சுகாதாரத் துறை அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

ஆனால், ஏற்கெனவே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவம னைகளில் நிலவும் மகப்பேறு மருத்து வர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக் குறையை போக்கவும், மகப்பேறு கட்டமைப்பு வசதிகள், பச்சிளம் குழந் தைகள் பராமரிப்பையும் உறுதிப்படுத் தாமலும் அவசர கோலத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது ஏற்புடை யது அல்ல என்ற விமர்சனமும் எழுந் துள்ளது.

தற்போது திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தினமும் சராச ரியாக 35 முதல் 40 பிரசவங்கள் நடை பெறுகின்றன. தங்க மோதிரம் திட்டத் தால் இந்த எண்ணிக்கை இனி அதிகரிக்கக்கூடும்.

மேலும், இங்கு பிறக்கும் குழந்தை களுக்கு வழங்கப்படும் மோதிரங் களை பாதுகாக்க பெட்டகங்கள், சிசி டிவி கேமராக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர, மோதிரம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த மருத்துவர்கள், அமைச்சு பணியாளர் கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தங்க மோதிரம் வைக்கப்பட்டுள்ள அட்டையில் க்யூஆர் கோடு மூலம், அது எந்த குழந்தைக்குரியது என்பது குறித்து தெரிந்து கொள்ளலாம். அந்த மோதிரம் குழந்தைக்கு வழங்கப்பட்ட வுடன், தாயின் கைரேகை பதிவு செய் யப்படும். இவை அனைத்தும் சிசிடிவி கேமரா முன்பு வைத்து நடைபெற உள்ளது. மகப்பேறு சிகிச்சைகளை சிறப்பாக மேற்கொண்டு தாய், சேய் பாதுகாப்பை உறுதி செய்வதை தாண்டி, இந்த திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் நெருக்கடியும் மருத்து வமனை நிர்வாகத்துக்கும், மருத்துவர் களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மகப்பேறு சிகிச்சை, தங்க மோதிரம் திட்டத்திலேயே முழுக் கவனத்தையும் மகப்பேறு மருத்துவத் துறை செலுத்தும் நிலை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் பாதிக்கப்படும் வாய்ப்பும் உள்ளது.

அதனால், மாற்று வழியில் திட் டத்தை நிறைவேற்ற வேண்டும். இல் லாவிடில், கூடுதல் பணியாளர்களை நியமிப்பது அவசியம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனர்

பழ. நெடுமாறனின் இளைய மகன் மாணிக்கம் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.4-

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனரான பழ.நெடுமா றன் அவர்களின் இளைய மகன் மாணிக்கம் அவர்கள் இயற் கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனரான ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் இளைய மகனும் புத்த துறவியுமான திரு. மாணிக்கம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

சமத்துவக் கொள்கைகளையும் தமிழுணர்வையும் ஊட்டி வளர்த்த அன்பு மகனை இழந்து தவிக்கும் ஐயா அவர்க ளுக்கு, இத்துயர்மிகு வேளையில் என் ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'திராவிட மாடல்' அரசின் சாதனை; 2024 - 25ஆம் ஆண்டுக்கான

தொழில்துறை வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம்!

ஒன்றிய அரசின் அறிக்கையைக் சுட்டிக்காட்டி டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, அக். 4 - ஒன்றிய அரசின் 2024-25 ஆம் ஆண்டுக்கான தொழில்துறை வளர்ச்சி யில் தமிழ்நாடு முதலி டம் வகித்ததற்கு திரா விட மாடல் அரசின் சாதனைக்கு மற்றொரு சாட்சி என்று முன்னாள் தொழில்துறை அமைச் சர் டி.ஆர்.பி.ராஜா தெரி வித்துள்ளார்.

இது குறித்து டி.ஆர். பி.ராஜா வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

ஒன்றிய அரசு வெளி யிட்ட 202425ம் ஆண்டுக் கான தொழில்துறை வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள் ளதை குறிப்பிட் டார். நாட்டிலேயே தொழில்து றையில் தமிழ்நாடு முன்



னிலை வகிப்பதற்கு திரா விட மாடல் அரசின் சாதனைக்கு மற்றும்ஒரு சாட்சி என்றும் சுட்டிக் காட்டினார்.

41 ஆயிரத்து 221 தொழிற்சாலைகளுடன் இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாகவு ம், உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாகவும் தெரி வித்தார்.

இந்தியாவின் ஒட்டு மொத்த முறைசார்ந்த உற்பத்தித்துறை பணியா ளர்களில் ஏறக்குறைய 15 சதவிகிதம் பேர் தமிழ் நாட்டிலேயே உள்ளதா கவும் கூறினார். வெறும் அ றி வி ப் பு க ள், புரிந்துணர்வு ஒப்பந்தங் களோடு இல்லாமல் உண்மையான வளர்ச் சியை திராவிட மாடல் அரசு கொடுத்துள்ளதாக குறிப்பிட்டார். தொழில் துறையில் திமுக அரசு செய்த மேலும் பல சாத னைகள் எதிர்காலத்தி லும் வெளியாகும் என்று முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரி வித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வாலாஜாபாத் தி.கிருஷ்ணராஜ்
அக்டோபர் 4 (2014)



வாலாஜாபாத் ஒன்றியக் கழக பொறுப்பாளராக 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகள் அதன்பின்னர் 1992 முதல் 2008ம் ஆண்டுவரை ஒன்றிய செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர்.

தொடர்ந்து 20 ஆண்டு காலம் வாலாஜாபாத் ஒன்றிய கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

